சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO.**83 / 2016**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **எ.ம.சா.1வ**து சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **17.04.2025**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | கலைமதி | கிராமம் : | |
| க/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் 2ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 01.08.2016 புலனாய்வு அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை அசல் - எ.ம.சா.ஆ-1 (சம்மந்தப்பட் புலனாய்வு அதிகாரியை கொண்டு மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய வேண்டும் என்பதால் மேற்படி அறிக்கையை குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்பட்டது), 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பாலிசி நகல் - எ.ம.சா.ஆ-2, மாதிரி வரைபடம் ஜெராக்ஸ் - எ.ம.சா.ஆ.3, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஜெராக்ஸ் - எ.ம.சா.ஆ-4,

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். முதல் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்திற்கு முழுமையான காப்பீடு அமலில் உள்ளது. விபத்தை பொறுத்து இறந்துபோனவர் மூன்றாம் நபர். மூன்றாவது நபருக்கு இழப்பீடு கொடுப்பதற்கு எங்களது நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கரூர் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் பழனிசாமி மகன் சிவசுப்பிமணியன் என்பவர் மேற்படி விபத்தில் உள்ள வாகனத்தை ஓட்டி அபராதம் செலுத்தியுள்ளார் என்கின்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் உரிமையாளர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தை யார் ஓட்டினார் என்று வாகனத்தின் உரிமையாளருக்கு அறிவிப்பு அனுப்பினோமா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வரைபடத்தில் விபத்தானது சாலையின் மையபகுதியில் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் விவரம் எங்களது காப்பீட்டு

நிறுவனத்திற்கும், காவல் துறையினருக்கும் தெரியும் என்றும் மனுதாரர்களுக்கு இழப்பீடு கிடைக்கக்கூடாது என்பதற்காக மறைத்துள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.